இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,866 — APRIL 12, 1917.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws made by the Local Board of Nawalapitiya relating to Dairies.]

"1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களின் கட்டளைச்சட்டம்."

1898 ம் ஆண்டின் சுகாதாரசங்கங்களின் கட்டளைச்சட்டத்தின் 56 ம் பிரிவுக்கமைய நாவலப்பிட்டிச் சுகாதாரசங்கம் உண்டாக்கிய பின்வரும் உபவிதிகளானவை உத்தமனார் தேசாதிபதியவர்கள் சமுகத்தில் வைக்கப்பட்டு அதிகாரமந்திர சபையாரின் ஆலோசனையோடு அவர்களாற் பெலப்படுத்தப்பட்டு இத்தாற் பிரசுரஞ்செய்யப்படுகின்றன.

உத்தமனாரது கட்டளைப்படி,

கொழும்பு, கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1917 ம் ஹூ சித்திரை மீ 4 ங் உ.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

மேற்கூறிய உபவிதிகள்.

1. சுகாதார சங்கத்தின் எல்லைகளுக்குட்பட்டிருக்கும் பால் விற்பவர்களெவரும் தங்கள் பெயர்களையும் பால் கறக்குமிடங்களையும் சபையின் கந்தோரில் பதிந்துவைக்க வேண்டும்

2. மலசலங்கழிக்குமிடத்திலிருந்து 50 அடிக்குள்ளும் அல்லது அப்படிப்பட்ட இடத்திலிருந்து வரும் கெட்ட மணங்கள் கிட்டுமிடத்திலும் மாட்டுத்தொழுவம் வைக்கக்கூடாது.

3. மாட்டுத்தொழுவமிருக்குமொவ்வொரு வளவும் கவண்மென்ற் ஏசண்டுத்துரையவர்களின் மனதிற்கேற்ற விதமாய் தண்ணீரோடுகிற நல்ல கான்களுள்ளதாயும், அக்கான்கள் எப்பொழுதும் கழுவப்பட்டு, மிருக்கவேண்டும் மாட்டுத்தொழுவ வளவிலே அழுக்குத் தண்ணீரை நிற்கவிடலாகாது.

4. ஓர் மாட்டுத் தொழுவத்துக்காகப் பாவிக்கின்ற மாடுகட்டுமிடங்களெல்லாம் சுத்தமாயும் துப்பரவாயும் எப்பொழுதும் பழுதுபார்த்துமிருக்கவேண்டும்; அவைகளின் தரை கழுவப்படக்கூடிய நிலையுள்ள சாமான்களினால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

5. மாட்டுத்தொழுவத்திலுள்ள அல்லது கிட்டவுள்ள இடங்கள் சீக்கிரம் ஊத்தை முதலியனவில்லாமல் துப்பரவு பண்ணப்பட்டிருக்க வேண்டும்; மேலும், சாணகம் மாட்டுத்தொழுவ வளவினின்று நாள்தோறும் அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. மாட்டுத்தொழுவமுள்ள வளவினின்று ஓர் நியாயமான தூரத்தில் வேண்டிய சுத்தத் தண்ணீர் இருக்கவேண்டும். தொழுவங்கள் உள்ள வளவிலிருக்குங் கிணறுகளில் முழுகவும் சீலை துப்பரவுபண்ணவுங் கூடாது. மேலும் முழுகவும் சீலை துப்பரவுபண்ணவும் உபயோகிக்கப்படும் வேறே வளவுகளிலுள்ள கிணற்றின் தண்ணீரை மாட்டுத்தொழுவம் துப்பரவுபண்ணுகிறதற்கு எடுக்கக்கூடாது.

7. மாட்டுத் தொழுவங்களுக்காகப் பாவிக்கப்படுமெந்தக் கட்டிடமும் குடியிருக்க அல்லது வேறே காரணங்களுக்காகப் பாவிக்கப்படக் கூடாது; மேலும் அந்தக் கட்டிடம் எப்போதும் துப்பரவாயிருக்கவேண்டும்.

8. பால்கறக்கிறதற்காக உபயோகிக்கப்படும் பசுக்களுக்கு யாதுநோயும் இருக்கப்படாது; மாட்டுத்தொழுவத்தை நடத்திவரும் எவருக்கும் தோலைப்பற்றிய ரோகங்களாவது தொற்றுவியாதிகளாவது இருக்கப்படாது. மேலும் பாலுக்குத் தண்ணீர் அல்லது வேறு தண்ணீர்ப்பதார்த்தம் கலக்கக்கூடாது.

9. ஓர் மாட்டுத்தொழுவத்திற் பாவிக்கப்படும் அல்லது உரியதாகும் உபகரணங்கள் தளபாடங்கள் முதலிய சகல சாமான்களும் துப்பரவாய் வைத்திருக்கப்படல் வேண்டும்.

10. பால் அனுப்புகிற சகல பாத்திரங்களும் நன்றாய் மூடி அடைத்திருக்கவேண்டும். அவைகளைக் கக்கத்துக்குக் கீழ் வைத்துக் கொண்டுபோகப்படாது.

11. கவண்மென்ற் ஏசண்டுத்துரையவர்களிட முத்தரவு பெறாமல் ஒருவரும் பால்கறந்துகொடுக்க அல்லது பால் விற்க அல்லது கொண்டுதிரிந்து விற்க அல்லது விலைக்கு வைத்திருக்கக் கூடாது. ஒருவருக்கு உத்தரவு கொடுக்குமுந்தி கவண்மென்ற் ஏசண்டுத்துரையவர்கள் தகுதியென்று கண்டால் அந்த ஆள் வியாதியில்லாதவனென்று அறிய டாக்குத்தரைக்கொண்டு அவனைச் சோதிப்பிக்கலாம் அப்படியான ஒவ்வொரு விற்பனவுகாரனும் பால் கொண்டுதிரியும் பொழுது தனக்குக் கொடுத்த உத்தரவை எப்பொழுதுங் கொண்டுதிரியவேண்டும்; மேலும் சுத்தமான ஆடைகளணிந்து கொள்ளவும் வேண்டும். இந்த உபவிதிக்கிசையக் கொடுக்கப்படும் உத்தரவு காசு வாங்காமற் கொடுக்கப்படும்.

12. கவண்மென்ற் ஏசண்டர், கவண்மெற் டாக்குத்தர், சங்கத்தின் சக்கிடுத்தார் அல்லது சோதனைகாரன் அல்லது சோதிக்கிறதற்காக கவண்மென்ற் ஏசண்டரிடம் எழுத்திலே தத்துவம்பெற்ற ஓராள், விற்கும் அல்லது விற்கவைக்கும் எவனிடமிருந்தாவது அவன் வைத்திருக்கும் பாலில் அல்லது மாட்டுத் தொழுவமென்று பதியப்பட்ட இடத்திலுள்ள பாலில் சாம்பிள் மாதிரிக்காகக் கொஞ்சத்தை சோதித்தற்கு எந்நேரமும் கேட்கலாம்; மேலும் பால்விற்கின்ற அல்லது விற்கவைத்திருக்கின்றவர்களும் மாட்டுத் தொழுவமுள்ள எல்லோரும் முன்சொன்ன காரணத்துக்குமுன் உத்தியோகஸ்தர்களை அல்லது தத்துவம்பெற்றவரை சாம்பிள் மாதிரிக்காகக் கொஞ்சப்பாலெடுக்கவிட வேண்டும்.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 848, N.P.**—1917 ம் ஆண்டு வைகாசிமாதம் 22 ந் திகதி, செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு, தன் ஆபீசில் வடமாகாணத்து கவற்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நீந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 14 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாணப்பகுதி பூனகரியிலும் மறுபிரிவுகளிலு மிருக்கின்றன.

ஒடுகெகுப்பணங் கட்டத்தவறிய காணிகள் விற்பனவு.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | பணங்கட்டத்தவறிய வரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| | பிளான் இலக்கம் 4,266. குறிச்சி—பொன்னுவெளி. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1981 | நாவல்மொட்டைதேக்குக் காடு | என். சிவகுருவும் வீ. இராமுவும் .. | காட்டுநிலம் .. | 2 0 19 .. | 16 |
| | பிளான் இலக்கம் 4,663. குறிச்சி—பொன்னுவெளி. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1 | புங்கந்தாள்வு .. | எஸ். காத்திகேசு .. | சிறுகாடு .. | 4 0 30 .. | 15·50 |
| 3 | முல்லையடிவயல் .. | ஷை .. | பணங்கட்டத் தவறியவரால் கூட்டிச்சேர்க்கப்பட்ட நிலம் .. | 0 0 17 .. | 30 |
| | பிளான் இலக்கம் 4,647. குறிச்சி—பொன்னுவெளி. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 2 | பள்ளக்காடு .. | எஸ். ஆறுமுகம் .. | சிறு காடு .. | 6 0 15 .. | 17 |
| | பிளான் இலக்கம் 4,653. குறிச்சி—கிராஞ்சி. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 8 | பூவரசன்மோட்டை .. | சின்னப்பொடி சொலோமனும், சூசை செவஸ்தியும், கரையூர் .. | நெற்செய்கைக்குத் தகுந்த நிலம் .. | 8 0 20 .. | 16 |
| | பிளான் இலக்கம் 4,694. குறிச்சி—வேரவில். உரித்தாளி அரசாட்சி. | | | | |
| 5 | இலங்கணக்கேணிவயல் .. | அருணசலம் கந்தர் .. | நெல்வயல் .. | 0 2 31 .. | 30 |
| 6 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 3 5 .. | 24 |
| | பிளான் இலக்கம் 4,619. குறிச்சி—நல்லூர். உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1 | அன்னதேவன்வயல்காடு | ஆர். சிற்றம்பலம் .. | சிறுகாடு .. | 4 2 28 .. | 15·50 |
| | பிளான் இலக்கம் 4,606. குறிச்சி—குஞ்சுப்பரந்தன். உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1 | சங்கரம்வயல்வெளி .. | கே. கணபதிப்பிள்ளை .. | காடு .. | 4 2 34 .. | 17 |
| | பிளான் இலக்கம் 4,666. குறிச்சி—குடாரப்பு. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1 | புளியடியில்காடு .. | எம். கணபதிப்பிள்ளை .. | சிறுகாடு .. | 2 0 2 .. | 17 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. | 3 3 11 .. | 17 |
| 4 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 38 .. | 17 |
| | பிளான் இலக்கம் 4,673. குறிச்சி—நெடுந்தீவு கிழக்கு. உரித்தாளி—அரசாட்சி. | | | | |
| 1 | வலையம்பிட்டி .. | ஆர். மருதையினார் .. | இத்துண்டில் 2 பனைகளுண்டு | 2 1 5 .. | 15 |
| 2 | ஷை .. | ஷை .. | சிறுதானிய வயல் .. | 1 3 23 .. | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசன்றுத் துரையிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை யிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1917 ம் ஸ்ரீ சித்திரைமீ 3 ந உ.

ஆர். ஈ. ஸ்ரப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 6,294.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1917 ம் ஸ்ரீ (ஏப்பிறல்) சித்திரைமீ 12 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. கம்றன் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடையகந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. கம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதேனி காற்பத்தைச்சேர்ந்த உடுக்கா கோறளை மேற்கில் தெலிகனுயங்கே என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டு:—

பிரதமபடம் 560.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ றூ. ப. |
|---|---|---|
| 5 .. | கன்சபாவை பாதை .. .. .. .. | 0 3 19 |

*இங்கிலீசின் நான்காம் பாகம் 506 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-அத்துருவலக் கிராம எல்லை, ஜயசிங்க முதலிகே பீறிஸ்சிங்கேவும் சேத்துநோனுவு முரித்தாடும் புஹுகாமுலவத்தை; கிழக்கு-ஜயசிங்க முதலிகே பீறிஸ்சிங்கோவும் சேத்துநோனுவு முரித்தாடும் புஹுகாமுலவத்தை, ஜயசிங்கமுதலிகே மாற்தேலிஸ் அப்புகாமி உரித்தாடும் கெற்றகாலகாமுலவத்தை, ஜயசிங்க முதலிகே மாற்தெலிஸ் அப்புகாமி உரித்தாடும் கெற்றகெலகாமுலகேன, அபேசிங்கமுதியான்செலாகே றன்காமியும் மறுபேரு முரித்தாடும் தல்காமுலபீல்லாவ, ஜயசிங்க முதலிகே டொன் அகிலிஸ்அப்பு உரித்தாடும் அற்றிக்ககாமுலவத்தை, கப்புஆச்சி உடுகம்பொலகே நோனுகாமியும் இன்னுமொருவரு முரித்தாடும் மக்குலாகாமுலவத்தை, ஜயசிங்க முதலிகே மானிஸ்சிங்கோ அப்புகாமியின் தத்துவகாறியான ஜேன்நோனு உரித்தாடும் விலந்தகாமுலகேன, கெற்றிகமகே சிங்க அப்புகாமி உரித்தாடும் விலந்தகாமுலவத்தை, மன்னுவ ஆராச்சிகே கெந்திறிக்அப்புகாமி உரித்தாடும் விலந்தகாமுலவத்தை, மில்லகஸ்பிற்றிய கிராம எல்லை; தெறகு-மில்லகஸ்பிற்றியக் கிராம எல்லை; மேற்கு-காப்பிற்றிகம் கோறளையில் லஸ்ஸபானவிலிருக்கும் அதிகாரிஅப்புகாமிலாகே அப்புகாமி உரித்தாடும் கோங்காமுலவத்தை, ஜயசிங்க முதலிகே அகிலிஸ்அப்புகாமி உரித்தாடும் தல்காமுலபீல்லாவ, அபய்சிங்க முதியான்செலாகே றன்காமியும் மறுபேரு முரித்தாடும் தல்காமுலபீல்லாவ, ஜயசிங்க முதலிகே நோனுகாமி உரித்தாடும் கோங்காமுலபீல்லாவ, ஜயசிங்க முதலிகே பீறிஸ்சிஞ்ஞோவும் சேத்துநோனுவு முரித்தாடும் புஹுகாமுலவத்தை, அபயசிங்க முதியான்செலாகே றன்காமியும் மறுபேரு முரித்தாடும் சேறுகாகும்புற, ஜயசிங்க முதலிகே பீறிஸ்சிஞ்ஞோவும் மறுபேரு முரித்தாடும் கறந்தகாமுலவெலபீல்லாவ, தலகிற்றியகமமுலகே கறமானிசின் தத்துவகாறியான லொக்குபொலகமகே றன்சோகாமி உரித்தாடும் கதுறுகாமுலவத்தை.

[Kurunegala S. O. 133—1917.]

---

[Kurunegala Notice No. 6,295.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1917 ம் ௵ (ஏப்பிறல்) சித்திரைமீ 12 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிறியால காற்பத்தைச்சேர்ந்த மகாகல்பொட எகோடக் கோறளையில் மொறகொல்ல வென்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டு:—

பிரதமபடம் 2,006.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| I 1009½ .. | மொறகாமுலவத்த .. .. .. .. | 0 0 27 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடிக்குரிய திம்பிறிகடவெலகின்ன; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட திம்பிறிகடவெலகேனகமகாவத்தை; மேற்கு-முடியால் விற்கப்பட்ட மொறகாமுலகேன (313,171 ம் உ. ப. ல் காணும் காணி).

*இங்கிலீசின் நான்காம் பாகம் 506 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 134—1917.]

---

[Notice *re* Destruction of Old Records, District Court, Mullaittivu.]

அறிவித்தல்.

1894 ம் ஆண்டு 12 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவிற் சொல்லிய ஒழுங்கின்படி இக்கோட்டில் 1845 ம் ஆண்டின் 1 ம் இலக்கம் துவக்கம் 20 வருஷத்திற்கு மேற்பட்ட சிவில் வழக்குகளும் இதனுள் காணி வழக்குகளையும் அப்பில் வழக்குகளையும் தவிர்த்து இத்திகதி தொடக்கம் மூன்று மாசத்தின்பின் அழிக்கப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொல்லிய இலக்க வழக்குகளுக்குள் யாதேனும் வழக்கை யாராவது தேள்வைப்பட்டால் அது அழிக்கப்படக் கூடாதென்று அவர் தானாக அல்லது தன் தரணி மூலமாக அல்லது தன் தத்துவகாரன் மூலமாக சரியான நியாயங் காட்டவேண்டியது.

டிஸ்திறிக் கோடு, முல்லைத்தீவு,
1917 ம் ஆண்டு பங்குனிமீ 29 ந் உ.

டபிள்யு. எல். கின்டேர்ஸ்லி,
டிஸ்திறிக் நீதவானும் கொம்மிஷனர்.

---

H. M. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.